சுற்றுநிருபம் : **09/2008**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
26.06.2008

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவையில் அத்தியாயம் 04 பிரிவு 4:1:8 திருத்தம் செய்தல்

மேற்போந்த விடயம் சம்பந்தமாக 1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதிய வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவை, அதனைத்தொடர்ந்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் திருத்தம் செய்து வெளியிடப்பட்ட 26.06.1999ம் திகதிய 42/99ம் இலக்க சுற்றுநிருபத்தின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்போந்த சுற்றறிக்கையின் 4:1:8 உட்பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக அப்பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் படி

4:1:8 கடமையின் நிமிர்த்தம் மோட்டார் சைக்கிளில் செல்வதற்கு சங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 5/= வீதமான படியொன்று செலுத்தப்படல் வேண்டும்.

உச்சத் தொகையினைத் தங்கள் பகுதிக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் கொடுப்பனவை மேற்கொள்ளலாம்.

இத் திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் 01.06.2008 ம் திகதியில் இருந்து வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

2008.06.20 ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்